# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 4th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - I<br>Christianity - I | Two Hours<br>Gr -13 (2021) | 43 | T | I |

பகுதி I

❖ **மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள புள்ளடித்தாளில் புள்ளடி இடுக.**

01. கத்தோலிக்கர்கள் பழைய ஏற்பாட்டில் இறை ஏவுதலால் எழுதப்பட்ட நூல்களாக ஏற்றுக்கொண்ட நூல்கள்.
    1) 39  2) 71  3) 46  4) 42  5) 36

02. யோசேப்பு ஆளுநர் பதவியை வகித்தது.
    1) பெத்தலேமில்  2) எகிப்தில்  3) கானானில்  4) சமாரியாவில்  5) மிதியானில்

03. அசீரியப் பேரரசு வட அரசில் யாத்திரைத் தலங்களைக் கட்டியதன் நோக்கம்.
    1) மக்கள் எருசலேம் ஆலயங்களுக்குச் செல்லுவதை தடை செய்ய.
    2) மக்களின் வழிபாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த.
    3) மக்கள் ஒன்று கூடுவதை தவிர்ப்பதற்கு.
    4) தூய இனம் ஒன்றை உருவாக்க.
    5) தென் அரசில் குருக்கள் இல்லாததால்

04. மனிதன் இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்துதண்டனை பெற்றாலும் இறைவன் அவனை கைவிடுவதில்லை என்பதற்கு உதாரணம்.
    1) பாவம் செய்யும் மனிதனுக்கு தண்டணை வழங்கியமை.
    2) ஆதாம் ஏவாளை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தியமை.
    3) பாம்புக்கும் மனிதனுக்கும் பகையை உண்டாக்கியமை.
    4) வெள்ளப்பெருக்கிலிருந்து உலகை காப்பாற்றியமை.
    5) இறைவன் காயீனுக்கு இரக்கம் காட்டியமை.

05. இவ்வுலகில் இறைவனின் சாயலுக்கும் உருவத்திற்கும் சமமானதாக கருதப்படும் ஒரே படைப்பு.
    1) கடல் வாழ் உயிரினங்கள் மட்டும்  2) சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மட்டும்
    3) வானதூதர்கள் மட்டும்  4) ஆணும் பெண்ணும் மட்டும்
    5) புனிதர்கள் மட்டும்.

06. படைத்தல் தொடர்பான இரண்டாவது கதைக்கு பின்னணியாக அமைந்துள்ளது.
    1) செங்கடல் கடப்பு  2) மன்னா பொழியப்பட்டது  3) காடைகள் கொடுக்கப்பட்டது
    4) விடுதலைப் பயணம்  5) பாஸ்கா விழா

07. யூத மக்களின் நம்பிக்கையின் மையமாக இருப்பது.
    1) சட்டம்  2) வழிபாடு  3) விருத்தசேதனம்  4) திருமுழுக்கு  5) மெசியா

08. “முறிந்த நாணலை மீண்டும் உடைப்பதில்லை. அணைந்து கொண்டிருக்கும் திரியை யாரும் அணைத்து விடுவதில்லை” இவ் வார்த்தை சுட்டிக்காட்டுவது.
1) பலமான மக்களை எடுத்துக்காட்டும் அடையாளம்.
2) பலவீனமான கைவிடப்பட்ட மக்களை எடுத்துக்காட்டும் அடையாளம்.
3) மக்களால் உடன்படிக்கை மீறப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டும் அடையாளம்.
4) அரசனை சுட்டிக்காட்டுவர் அடையாளம்.
5) முறிந்த நாணலை உடைக்க முடியாது என்பதை அடையாளப்படுத்துகிறது.

09. ஞான இலக்கியத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது.
1) மனித வாழ்வை வெற்றிகரமாகவும் நேர்மையாகவும் வாழ மக்களுக்கு வழிகாட்டுவதாகும்.
2) இறைவனிடம் கேட்க வேண்டியதை கேட்டால் ஆகும்.
3) இறைவனுக்கும் மனிதனுக்குமிடையான தொடர்பை விளக்குவதாகும்.
4) மனிதனுக்கு ஆறறிவு உண்டு என்பதைக் காட்டும்.
5) படைப்பின் சிகரமாக மனிதன் படைக்கப்பட்டதுடன் என்பதாகும்.

10. சமூக நீதியின் இறைவாக்கினர் என அழைக்கப்பட்டவர்.
1) எசாயா 2) எரேமியா 3) ஆமோஸ் 4) ஓசேயா 5) எசேக்கியேல்

11. திருப்பாடல் தொடர்பாக ஆழமான ஆய்வொன்றை முதன் முதலாகச் செய்தவர்.
1) ஹேமன் குண்கன் 2) சிக்மன் மொவின் 3) ஆத்தர் வைசர்
4) சல்மென் 5) தோமஸ்மூர்

12. இறைவனில் நம்பிக்கையும் அடைக்கலமும் வைத்துப் பாடப்படும் பாடல்.
1) புகழ்ச்சிப்பாடல் 2) புலம்பல் பாடல் 3) நன்றிப்பாடல்
4) ஞானபாடல் 5) நம்பிக்கையின் பாடல்

13. கிறிஸ்துவின் காலத்தில் பலஸ்தீனாவின் ஆட்சி அதிகாரம் உரிமையாய் இருந்தது.
1) யூதர்களுக்கு 2) உரோமையருக்கு 3) கொரிந்தியருக்கு
4) எகிப்தியருக்கு 5) பபிலோனியருக்கு

14. யேசுவின் பிறப்பை பற்றிய முதலாவது நற்செய்தியை வரப்பிரசாதமாகப் பெற்றவர்கள்.
1) ஞானிகள் 2) ஏரோது 3) இடையர்கள் 4) குருக்கள் 5) காவலாளிகள்

15. யேசு யாக்கோபின் கிணற்றடியில் சமாரியாப் பெண்ணிடம் தண்ணீர் கேட்ட இடம்.
1) மம்பிறே 2) செக்கேம் 3) பெத்தேல் 4) சிக்கார் 5) எருசலேம்

16. உரோமைப் பேரரசுக்கு எதிராக இவர்கள் மெசியாவின் வருகை பற்றிய எதிர்பார்ப்போடு இருந்த குழுவினர்.
1) எஸ்சேனியர் 2) பரிசேயர் 3) சதுசேயர்
4) மறைநூல் அறிஞர் 5) செலஸ்தியர்

17. எகிப்தியர் முகம் கொடுத்த பெரும் துன்பங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன
A – கொசுக்களின் தொல்லை B – வெட்டுக்கிளிகளின் தொல்லை C – காரிருள்
D – கால்நடைகளின் சாவு E – கொப்பளங்கள் வெடித்தல் F – தலைமகன் சாவு

இவற்றில் பார்வோனுடன் எவ்வித பேரம் பேசுதல் இன்றியும் மோசேயும் ஆரோனும் சேர்ந்து உருவாக்கிய பெருந்துன்பங்களைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.
1) A, C, F 2) A, D, F 3) A, E, F 4) A, E, C 5) A, B, D

18. பாஸ்கா என்பது
1) விவசாயிகளின் விழா 2) மீனவர்களின் விழா 3) மேய்ப்பர்களின் விழா
4) எகிப்தியரின் விழா 5) பலதரப்பட்ட தொழிலாளர்களின் விழா

19. திருவிவிலியத்தில் ஆணவத்தின் நகரமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
1) கானான் 2) பபிலோனியா 3) எகிப்து 4) உரோமாபுரி 5) எதென்ஸ்

20. கோத்திரமாக வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் ஒழுக்கமுள்ள இனமாகியது.
1) சீனாய் உடன்படிக்கையினால்.
2) எட்டுப்பேறுகளுக்கும் பிரமாணிக்கமாய் இருந்தமையால்.
3) பாகால் தெய்வங்களை வழிபட்டமையால்.
4) அரசியல் தாக்கங்களினால்.
5) சமுதாயத்தின் தாக்கங்களினால்.

21. பின்வருவன இறைவாக்கினர் சிலரின் பெயர்களாகும்.
A - எசாயா B - ஒசேயா C - யோவேல் D - எசேக்கியேல் E - எரேமியா

இங்கு தரப்பட்டுள்ளவற்றுள் பெரிய இறைவாக்கியரைக் குறிக்கும் எழுத்துக்கள் யாவை?
1) A, B, C 2) A, B, D 3) B, C, D 4) C, D, E 5) A, D, E

22. எசேக்கியேல் இறைவாக்கினர் தமது இறைவாக்குப் பணியில் ஈடுபட்ட பிரதேசம்.
1) பலஸ்தீனா 2) அசீரியா 3) பபிலோனியா 4) எகிப்து 5) சமாரியா

23. யூத சமய மக்கள் குழுவினருக்கிடையில் மிக மதிப்புடன் கவனிக்கப்பட்ட அதிகாரம் நிறைந்த ஒரு குழுவினர்.
1) ஏரோதியர் 2) பரிசேயர் 3) எஸ்சேனியர் 4) சதுசேயர் 5) லேவியர்

24. நற்செயதி என்பது.
1) வானதூதர்களாகும் 2) படைப்பாகும் 3) இறைவாக்கினராகும்
4) இயேசுவேயாகும் 5) திருவிவிலியமாகும்

25. “நான்”, “நானே” என சுய வெளிப்படுத்தல் கூற்றுக்களைக் கொண்டுள்ள நற்செய்தி.
1) யோவான் நற்செய்தி 2) லூக்கா நற்செய்தி 3) மத்தேயு நற்செய்தி
4) மாற்கு நற்செய்தி 5) திருத்தூதர் பணி

26. புதிய ஏற்பாட்டில் மீட்பு வரலாற்றை வெளிப்படுத்தும் நூல்.
1) திருத்தூதர்பணி நூல் 2) விடுதலைப்பயண நூல் 3) எண்ணிக்கை நூல்
4) லூக்கா நற்செய்தி நூல் 5) லேவியர் நூல்

27. பிற இனத்தவரின் அப்போஸ்தலராக மாபெரும் பணியினை நிறைவேற்றியவர்.
1) ஆரோன் 2) யோவான் 3) பவுல் 4) அனனியா 5) பேதுரு

28. முதன் முறையாக “கிறிஸ்தவம்” என்ற பெயரில் சீடர்கள் அழைக்கப்பட்ட இடம்.
1) பாப்போவில் 2) தெருபையில்
3) பம்பிலியாவில் 4) சீரியாவின் அந்தியோக்கியாவில்
5) செலுக்கியாவில்

29. எருசலேம் சங்கம் கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய முன்மாதிரிகைகளாவன.
  1) விழிப்பாய் இருந்து செபித்தல்.
  2) இடையூறு விளைவிக்காதிருத்தல்.
  3) பிரச்சனைகளைப் பேசித்தீர்த்தல்.
  4) ஒற்றுமையாக செயற்படல்.
  5) பிரச்சனைகள், முரண்பாடுகள், சவால்கள் மத்தியில் நலிவடையாது ஒற்றுமையாக சவால்களுக்கு முகங்கொடுத்து, பிரச்சனைகளைத் தீர்த்து சரியான தீர்மானங்களை எடுக்க முயற்சித்தல்.

30. பவுல் ஒரு கடிதத்தின் வடிவில் எழுதப்பட்ட மிகக்குறுகிய தனிப்பட்ட ஒரு மடல் என அழைக்கப்பட்டது.
  1) தீத்துவுக்கு எழுதிய திருமுகம்
  2) பிலமோனுக்கு எழுதிய திருமுகம்
  3) கொலோசையருக்கு எழுதிய திருமுகம்
  4) உரோமையருக்கு எழுதிய திருமுகம்
  5) எபேசியருக்கு எழுதிய திருமுகம்

31. ஆரம்ப காலத்தில் அப்போஸ்தலரின் கைநூல் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.
  1) மத்தேயு நற்செய்தி
  2) மாற்கு நற்செய்தி
  3) லூக்கா நற்செய்தி
  4) யோவான் நற்செய்தி
  5) பவுலின் திருமுகம்

32. யேசு தமது முதற்போதனையின் போது வாசித்த இறைவார்த்தை பகுதியாக அமைந்தது.
  1) "மனிதன் அப்பத்தினால் மட்டும் உயிர் வாழ்வதில்லை"
  2) "ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்.."
  3) "சிறுவரை என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்காதீர்கள்"
  4) "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்"
  5) "ஒருவன் நீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்குள் நுழையமுடியாது"

33. திவ்விய நற்கருணையை ஏற்படுத்துதல் தொடர்பாகப் புதிய ஏற்பாட்டில் உள்ள அறிக்கைகளுள் மிகப் பழமையான அறிக்கையாக இருப்பது.
  1) லூக்கா 22 : 19 – 20
  2) மாற்று 14 : 22 – 24
  3) மத்தேயு 26 : 26 – 28
  4) 1 கொரி 11 : 17 – 35
  5) 1 கொரி 11 : 23 – 26

34. யூதர்களால் நடாத்தவிருந்த பெந்தக்கோஸ்து திருவிழாவன்று இடம் பெற்ற நிகழ்வு.
  1) நாணய மாற்றம் இடம் பெற்றமை
  2) உண்டு குடித்து மகிழ்ந்தமை
  3) தூய ஆவியாரின் வருகை இடம் பெற்றமை
  4) பெயர் பதியப்பட்டமை
  5) செம்மறி வெட்டப்பட்டமை.

35. "இதோ வானம் திறந்திருப்பதையும் மானிட மகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கின்றேன்" என தைரியத்தோடு யூதர்களுக்கு எடுத்துக் கூறியவர்.
  1) ஸ்தேவான்
  2) திருமுழுக்கு யோவான்
  3) சீமோன் பேதுரு
  4) பவுல்
  5) பிலிப்பு

36. பேதுரு எழுந்து பேசுகையில் மீட்பு பெறுவது யேசுவின் அருளால் மட்டுமே என்பதை விளக்கமாக கூடிய இடம்.
  1) எபேசு பொதுச்சங்கத்தில்
  2) நிசேயா பொதுச்சங்கத்தில்
  3) கல்சிடோன் பொதுச்சங்கத்தில்
  4) 1வது வத்திக்கான் சங்கத்தில்
  5) எருசலேம் பொதுச்சங்கத்தில்

37. கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் துன்புறுத்தல்களை ஆரம்பித்த முதலாவது உரோமைப் பேரரசன்.
1) பேரரசன் தொமீசியன் 2) பேரரசன் மாக்கிமியன் 3) பேரரசன் திராஜன்
4) பேரரசன் நீரோ 5) பேரரசன் மாற்குஸ் அவுரேலியன்

38. பேரரசன் தொமிசியன் புனித யோவானை நாடு கடத்திய இடம்.
1) எருசலேம் 2) அசீரியா 3) பத்மு தீவுக்கு 4) அந்தியோக்கியா 5) சமாரியா

39. மறைசாட்சி மரணத்திற்கு உள்ளாகிய புனித இக்னேசியஸ் தமது மரணத்திற்கு முன் கலாபனை வன்செயல்கள் பற்றி கடிதம் எழுதியது.
1) எருசலேம் சபைக்கு 2) சிமெர்னா ஆயர் பெலிகார்ப்பு உட்பட பலருக்கு
3) திருச்சபைக்கு 4) உரோமைய மக்களுக்கு 5) யூதக்கிறிஸ்தவர்களுக்கு

40. சிலுவையின் அடையாளம் பேரரசின் உத்தியோக சின்னமாக்கப்பட்டது எப்போது.
1) மிலான் சாசனத்தின் போது 2) ஏழாவது கலாபனையின் போது
3) விடுதலைப் பயணத்தின் போது 4) ஸ்தேவானின் படுகொலையின் போது
5) திருச்சபை உதயமான போது

41. கலாபனைக் காலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது எந்தப் பேரரசனால்.
1) பேரரசன் ஏரோதினால் 2) பேரரசன் திராஜனால் 3) பேரரசன் கொன்ஸ்தாந்தினால்
4) பேரரசன் கொலம்பசினால் 5) பேரரசன் தொமீசியனால்

42. கிரேக்க தந்தையர்களின் பிரிவைச் சேர்ந்தவர்.
1) பெரிய கிரகோரியார் 2) அத்தனாசியார் 3) அம்புறோஸ்
4) ஜெரோம் 5) அகஸ்தீன்

43. ''அப்போலோஜியா'' என்பதன் பொருள்.
1) விடுதலை 2) விரிவாக்கல் 3) மீட்பு 4) பாதுகாப்பு 5) தெளிவு

44. A – பலஸ்தீனாவில் பிறந்தார்
B – தத்துவ ஞானி
C – தத்துவ ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் கிறிஸ்தவ மறையை கற்றவர்
D – இவர் தேடிய உண்மை கிறிஸ்தவ மறையிலே உள்ளது என விளங்கிக் கொண்டவர்.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுக்குபொருத்தமானவர்
1) புனித அத்தனாசி 2) புனித ஜெரோம் 3) புனித சிறில்
4) புனித அகுஸ்தீனார் 5) புனித ஜஸ்டின்

45. ஆரிய பேதகத்தை திருச்சபையின் வழியாக ஒழிப்பதற்கு முன்னோடியாக இருந்தவர்.
1) புனித அத்தனாசியார் 2) புனித ஜெரோம் 3) புனித பேதுரு
4) புனித பிரான்சிஸ் 5) கிறிஸ்தவ குரு ஆரியுஸ்

46. அப்பாவி கிறிஸ்தவர்களை துன்புறுத்திய உரோமைய ஆட்சியாளர்களுக்கு ''மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்கும் வித்தாகும்'' என்ற பெறுமதி வாய்ந்த கூற்றை முன்வைத்தவர்.
1) ஓரிஜின் 2) தோமஸ்மூர் 3) இஞ்ஞாசியார் 4) அகுஸ்தீனார் 5) தெர்த்தூலியன்

47. திருச்சங்கம் ஒன்றுக்காக அழைப்புவிடுத்தல், நடாத்துதல், அனுமதி வழங்குதல் என்பனவற்றின் முக்கிய பணியாளர்.

1) ஆயர்　2) குரு　3) திருத்தந்தை　4) கருதினால்　5) துறவிகள்

48. லிபெலுஸ் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கும் கட்டளை விதிக்கப்பட்ட கலாபனை.

1) ஏழாவது　2) மூன்றாவது　3) ஆறாவது　4) ஐந்தாவது　5) பத்தாவது

49. கிறிஸ்துவின் தாழ்ச்சி காரணமாகவும், வெறுமையாக்கலின் மூலமாகவும் கிறிஸ்துவுக்கு கிடைத்த புதுப்பெயர்.

1) மீட்பர் என்பதாகும்　2) இயேசுவே ஆண்டவர் என்பதாகும்
3) மகிமையின் அரசர் என்பதாகும்　4) விடுதலையின் நாயகன் என்பதாகும்
5) அரசர் என்பதாகும்

50. ஞான இலக்கிய நூல்களைக் கொண்ட தொகுதி.

1) யோபு, சீராக்கின் ஞானம், விடுதலைப் பயணம்.
2) தோபித், யூதித், எஸ்ரா.
3) யோபு, 1 மக்கபேயர், நீதி மொழிகள்.
4) யோபு, திருப்பாடல், சீராக்கின் ஞானம்.
5) யோசுவா, சாமுவேல், சாலமோனின் ஞானம்.

(50 x 2 = 100 புள்ளிகள்)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 4th Term Examination - 2021

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - II<br>Christianity - II | Three Hours<br>Gr -13 (2021) | 43 | T | II |

*மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்*

பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

1) i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் உலகம் மற்றும் மனிதன் படைக்கப்பட்டது தொடர்பாக கூறும் கதைகள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii) நீதித் தலைவர்கள் காலத்து ஆட்சி பலவீனமடைந்து காணப்பட்டமைக்கான காரணங்கள் 2 தருக. (4 புள்ளிகள்)

iii) சாலமோன் அரசனின் ஆட்சியில் மக்கள் விரக்தியடைந்தமைக்கான காரணங்கள் மூன்று எழுதுக. (6 புள்ளிகள்)

iv) படைப்பு தொடர்பான முதலாவது கதை ஒரு திட்டமிட்ட ஒழுங்குமுறையில் கட்டியெழுப்பப் பட்டிருக்கின்றன என்பதற்கு எல்லா நாட்களுக்கும் பொதுவான பண்புகளை உதாரணத்துடன் தருக. (8 புள்ளிகள்)

2) i) பபிலோனியாவில் வாழ்ந்த யூதர்கள் தமது தாய் நாட்டை நோக்கி பயணம் செய்ய தலைமை தாங்கிய இருவரின் பெயர்களை எழுதுக. (2 புள்ளிகள்)

ii) யூதப் பாஸ்கா விழா சடங்கில் உள்ளடங்கிய இரண்டு அம்சங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii) இஸ்ராயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கைக்காக தம்மை ஆயத்தமான முறை (வி.ப.19:10 – 14) பற்றி குறிப்பிடப்படும் விடயங்கள் மூன்று எழுதுக. (6 புள்ளிகள்)

iv) சீனாய் உடன்படிக்கை உறுதி செய்யப்பட்ட முதலாவது கட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நான்கு எழுதுக. (8 புள்ளிகள்)

3) i) திருச்சபையின் முதல் மறைசாட்சியும், திருத்தூதர்களின் முதல் மறைசாட்சியும் என அழைக்கப்பட்டவர்கள் இருவரின் பெயர்களையும் தருக. (2 புள்ளிகள்)

ii) ஸ்தேவான் தனது சாவின் முன்பாக கூறிய வார்த்தைகள் இரண்டையும் எழுதுக. (4 புள்ளிகள்)

iii) மிலான் சாசனத்தின் வழியாக கிறிஸ்தவர்களுக்கு கிடைத்த நன்மைகள் மூன்று எழுதுக. (6 புள்ளிகள்)

iv) திருமுழுக்கு அழைப்பிற்கு ஏற்ப கிறிஸ்தவராகிய நாம் இறைவாக்கினரின் பணியில் ஈடுபட எம்மால் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கை தந்து விளக்குக. (8 புள்ளிகள்)

## பகுதி II

4) i) பெந்தக்கோஸ்து நாளன்று தூய ஆவியாரின் வருகையுடன் திருச்சபை உதயமாகியது. இதனை ஐந்து காரணிகளை முன்வைத்து விளக்குக. *(10 புள்ளிகள்)*

ii) ஆரம்பகால திருச்சபையின் முன்மாதிரிகையான செயற்பாடுகள் இன்றைய கிறிஸ்தவ வாழ்விற்கு சவாலாக அமைகின்றது என்பதற்கு ஐந்து காரணிகள் தந்து விளக்குக. *(10 புள்ளிகள்)*

5) i) தூய மத்தேயு முன்வைக்கும் யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, மற்றும் சாட்சியளித்தல் பற்றிய போதனையில் அடங்கியுள்ள விடயங்கள் ஐந்தினை விளக்குக. *(10 புள்ளிகள்)*

ii) கிறிஸ்தவ மாணவராகிய நீர் அன்றாட வாழ்வில் நற்செய்தி மூலம் இறைபராமரிப்பை அனுபவிக்கும் சந்தர்ப்பங்கள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

6) i) பிற இனத்தவர் மத்தியில் நற்செய்தி பரப்பப்பட்ட விதத்தினை (தி.ப. *8 : 4 – 18, 10 : 1 – 48)* ஆதாரங்களைக் கொண்டு விளக்குக. *(10 புள்ளிகள்)*

ii) திருச்சபையின் மறை உண்மைகளுக்கு எதிராக எழுகின்ற சவால்களுக்கு தைரியமாக எவ்வாறு முகங்கொடுப்பீர் என விளக்குக. *(10 புள்ளிகள்)*

7) i) "மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்கும் வித்து" என்ற கூற்று பேரரசன் தியோக்கிளிசியன் காலத்தில் கிறிஸ்தவர்கள் முகம்கொடுத்த துன்பங்களை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

ii) மிலான் சாசனத்தின் பின்னர் கிடைக்கப்பெற்ற சலுகைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

8) i) ஏலோகிம் பாரம்பரியத்தின் கருப்பொருளினூடாக வெளிக்கொணரும் மறையுண்மைகளை தந்து விளக்குக. *(10 புள்ளிகள்)*

ii) தூய பவுலின் திருமுகங்களில் காணக்கூடிய பண்புகளை விளக்குக. *(10 புள்ளிகள்)*